


கே.எஸ்.ஆர். கல்வி நிறுவனங்களின் செயலர் அவர்கள்
"சிறந்த கல்வியாளர் - 2013" விருதினைத்
தமிழக ஆளுநர் அவர்களிடமிருந்து பெறுகிறார்.

KSR COLLEGE OF ARTS AND SCIENCE INDIA
Knowledge is Power

விடியல் மாத இதழ் (தனிச்சுற்றுக்கு மட்டும்)
வெளியீடு: தமிழ்த்துறை
கே.எஸ். ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
திருச்செங்கோடு – 637 215, தமிழ்நாடு, இந்தியா.
*fb* : facebook.com/ksrcasthamizh.vidiyal
*Blog* : *ksrcasthamizh.blogspot.in*
*Email* : *vidiyalmagazhine@gmail.com*
*Website* : *ksrcas.edu*

Vidiyal - 55 November 2013

SUN Printer தி.கோடு. 97500 20222

# விடியல்

The Dawn மாத இதழ்


பொழுது - 55
நவம்பர் 2013

## குழந்தைகள் தினம்



S. ARAVIND
I BCOM CA [A]





J. சந்தோஷ்
I$^{st}$ Bcom (CA)
"B"



by
D. Indhumathi
II$^{nd}$ B.com(CA) 'A'



# விடியல்

The Dawn

**மாத இதழ், பொழுது – 55**
**நவம்பர், 2013**
பக்கங்கள் - 32, தனிச்சுற்றுக்கு மட்டும்



***சிறப்பாசிரியர்***
**முனைவர் நா. கண்ணன்**
கல்லூரி முதல்வர்

***ஆசிரியர்***
**முனைவர் மா. கார்த்திகேயன்**
தமிழ்த்துறைத் தலைவர்

***இணை ஆசிரியர்***
**முனைவர் ப. சரவணன்**
தமிழ் உதவிப் பேராசிரியர்

***ஆசிரியர் குழு***
தமிழ் உதவிப் பேராசிரியர்கள்
அனைவரும்



***வெளியீடு:***

*தமிழ்த்துறை*

***கே.எஸ். ரங்கசாமி***
***கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)***
*திருச்செங்கோடு – 637 215,*
*தமிழ்நாடு, இந்தியா.*
fb: facebook.com/ksrcasthamizh.vidiyal
Blog: ksrcasthamizh.blogspot.in
Email : vidiyalmagazhine@gmail.com
Website: ksrcas.edu



***© K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)***

*All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted, in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of the publisher.*


## *இந்த இதழில்…*

*ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு துறையைச் சார்ந்த மாணாக்கர்களின் படைப்புகளே விடியலில் இடம்பெற்று வருகின்றன.*

*அவ் வரிசையில் இம்மாத இதழில்* ***இளங்கலை வணிகவியல் (கணினி பயன்பாடு) துறை*** *யைச் சார்ந்த மாணாக்கர்களின் படைப்புகள் இடம் பெறுகின்றன.*

*இந்த இதழ் உருவாக உதவிய இளங்கலை வணிகவியல் (கணினி பயன்பாடு) துறைத்தலைவர்* ***முனைவர் ச.மகேஷ்குமார்*** *அவர்களுக்கும் அத் துறையின் அனைத்துப் பேராசிரியர் களுக்கும் மாணாக்கர்களுக்கும் நன்றி.*

*டிசம்பர் மாத விடியல் இதழில்* ***இளங்கலை உயிர் வேதியியல் துறை*** *யைச் சார்ந்த மாணாக்கர்களின் படைப்புகள் இடம் பெறவுள்ளன.*

*அதற்கு இசைவு தெரிவித்துள்ள இளங்கலை உயிர் வேதியியல் துறைத் தலைவர்* ***முனைவர் எம்.சத்யவதி*** *அவர்களுக்கும் அத்துறைப் பேராசிரியர் களுக்கும் மாணாக்கர்களுக்கும் நன்றி.*

## *வாழ்த்துகள்*

*வருகிற பிப்ரவரி 2014 இல் நடைபெறவுள்ள தேசிய அளவிலான கபடிப்போட்டியில் பங்கேற்றகவுள்ள தமிழக அணியில், இக் கல்லூரியில்* ***இளங்கலை இரண்டாம் ஆண்டு தமிழ் இலக்கியம் பயிலும் மாணவர் ர. குமரேசன் அவர்கள்*** *இடம்பெறவுள்ளார். அம் மாணவரை விடியல் வாழ்த்துகிறது.*

# உள்ளடக்கம்

## கட்டுரைகள்


| | |
|---|---|
| மருத்துவக் குறிப்புகள் | 04 |
| எறும்பின் பெரியவேலை | 10 |
| பணக்காரர்கள் | 14 |
| பன்னாட்டுப் பணம்... | 19 |
| RBI Governor | 25 |


## கவிதைகள்


| | |
|---|---|
| பருவம் தவறிய மழை | 03 |
| நட்பு | 04 |
| பற்றியெரிகிறது போதிமரம் | 05 |
| பெற்றதும் கொடுத்ததும் | 07 |
| முரண் | 07 |
| புன்னகை | 07 |
| வரம் | 07 |
| குழந்தையின் கதறல் | 08 |
| வெற்றி நிச்சயம் | 08 |
| தீக்குச்சி | 09 |
| உயிரில் கலந்த நட்பு | 09 |
| அனுபவம் | 11 |
| நட்பு | 11 |
| பாசம் | 11 |
| வெற்றி | 11 |
| அம்மா | 11 |
| நஷ்டம் | 12 |
| அம்மாவின் பாசம் | 12 |
| வெற்றியின் புன்னகை | 13 |
| என் அம்மா | 13 |
| இப்படிக்குப் பஞ்சம் | 20 |
| நாளைய சமுதாயம் | 21 |
| நிஜம் | 21 |
| நேரம் | 21 |
| வெல்க | 21 |
| என் தாயும் ஒரு போதிமரம் | 22 |
| வேண்டும் வேண்டும் | 22 |
| நாளையின் நாயகன் | 28 |
| பெண் சிசுக்கொலை | 28 |
| கும்பகோணத்தில் மகாவதம் | 29 |
| தந்தையின் அன்பு | 30 |
| தாய்ப் பாசம் | 30 |
| வாழ்க்கை நாடகமல்ல | 30 |
| எதிர்நீச்சல் | 30 |


## ஓவியங்கள்


தூரிகை மொழி –

15-18, 23-24


## நிகழ்ச்சிகள்


| | |
|---|---|
| சிறப்புச் சொற்பொழிவு | 31 |
| கவியரங்கம் | 31 |


இவ் இதழ் குறித்த தங்களின் மேலான கருத்துகளையும் அறிவுரைகளையும் எங்களுக்குத் தெரிவித்துதவவும் -ஆசிரியர்

## சின்னச் சின்ன தகவல்கள்

**சீல்மீன்கள்**

சீல்கள் பொதுவாக ஒரு குட்டியையே ஈனும். இரண்டு குட்டிகள் பிறந்தாலும் தாய் அவற்றில் ஒன்றை மட்டுமே வளர்க்கும். இரண்டாவது குட்டியை மற்றொரு சீலுக்குத் தத்துக் கொடுத்துவிடும்.

**சிவப்பு நிறம்**

செவ்வாய்க் கிரகத்திற்குச் சிவப்பு கிரகம் என்று பெயர். வியட்நாமில் சிவப்பு நதி ஓடுகிறது. சிவப்பு புத்தகம் என்ற நூலை எழுதியவர் மாவோ. செவ்விந்தியர்கள் மங்கோலிய இனத் தைச் சேர்ந்தவர்கள். செஞ்சதுக்கம் மாஸ்கோவில் உள்ளது. உலகில் சிவப்பு வண்ணமே மிகுதியாகப் பயன்படுத்தப்படுகிறது.


**ஜி. நவீன் குமார்**
இளங்கலை வணிகவியல் கணினி பயன்பாடு
முதலாண்டு 'ஆ' பிரிவு


## கவிதை

"பறந்து செல்லும்
பட்டாம்பூச்சி.
அதைப் பிடிக்கச் செல்லும்
குழந்தை.
ஜெயிக்கப் போவது யார்?
பதட்டத்தோடு பார்க்கும்
பார்வையாளர்களாய்ப் பூக்கள்."


**ஆர். அரவிந்தன்**
இளங்கலை வணிகவியல் கணினி பயன்பாடு
இரண்டாமாண்டு 'ஆ' பிரிவு


## பருவம் தவறிய மழை

"குளிர் காற்று
பச்சை மரங்கள்மீது வீசிட
கரு மேகக்கூட்டங்கள்
மின்னலுடன் இசையோடு பேசிட
பூக்கள் அனைத்தும்
இதழ் விரித்துச் சிரித்திட
வண்ணத்துப் பூச்சிகள்
சிறகுகளே இல்லாது பறந்திட
பூமியெங்கும் பூமாரி பொழிந்திட
இயற்கைச் செல்வங்கள்
நிலத்தில் முளைத்திட
மக்கள் அனைவரும்
ஆனந்த மழையில் நனைந்திட
மழையே! உன்னைக்
காணும் மகிழ்ச்சியை
மக்கள் என்று அடைவர்?."


**மு. விசயன்**
இளங்கலை வணிகவியல் கணினி
பயன்பாடு மூன்றாமாண்டு 'ஆ' பிரிவு


## துளிப்பா

**மழைத்துளி**

"மேகத்திற்குப் பிரசவம்.
வரிசையாகப் பிறந்து
விழுந்தன மழைத்துளிகள்."


**அஜித்**
இளங்கலை வணிகவியல் கணினி
பயன்பாடு முதலாண்டு 'இ' பிரிவு

## பாம்புக் கடிக்கு எட்டுவகையான மருந்துகள்

1. வாழைப்பட்டைச் சாறு எடுத்து ஒரு டம்ளர் உள்ளுக்குள் கொடுக்க விஷம் முறியும்.

2. தும்பை இலையின் சாற்றில் சிறிதளவு மிளகுப்பொடியைக் கலந்து கடியுண்டவருக்குக் கொடுக்க விஷம் முறியும்.

3. பேய்ச்சுரை வேரைச் சிறிதளவு எடுத்து அரைத்துக் கொட்டைப் பாக்கு அளவுக்கு உள்ளுக்குத்தர விஷம் முறியும்.

4. சீந்தில் கிழங்கைச் சின்னச் சின்னத் தண்டாகச் சீவி உள்ளுக்குள் கொடுக்க விஷம் முறியும்.

5. பெருமருந்து வேரை வாயில் அடக்கி உமிழ்நீரைச் சிறிது சிறிதாக விழுங்கி வந்தால் விஷம் ஏறாது.

6. வேப்பெண்ணெயை 100 மில்லி முதல் இருநூறு மில்லி வரை உள்ளுக்குள் தர விஷம் இறங்கும்.

7. சிறிதளவு பசுவின் பாலில் சிறிதளவு வெள்வேலம் பட்டையை அரைத்து 200 மில்லி அளவு உள்ளுக்குத் தர விஷம் முறிந்துபோகும்.

### பூரான் கடியும் சிகிச்சை முறைகளும்

பூரான் மனிதனைக் கடித்தால் வலி தெரியாது என்று சொல்லப் படுகின்றது. கடித்த பின்னரும் வலி இருக்காது என்றே நம்பப்படுகின்றது.

### விளைவுகள்

பூரான் கடியின் விளைவுகளாகப் பின்வருபவை நிகழ்கின்றன.

1. உடல் முழுவதும் அங்கும் இங்கும் எரிச்சல் ஏற்படுகின்றது.
2. அரிப்பு உண்டாகிறது.
3. தடிப்புகள் தோன்றுகின்றன.
4. ஒருவித நமைச்சல் ஏற்படுகின்றது.
5. பூரான் கடித்தால் யாரும் மரணம் அடைவதில்லை.

### பத்தியம்

பூரான் கடிக்கு மருந்து சாப்பிடும்போது நல்லெண்ணெய், புளி, உப்பு, கருவாடு, கத்தரிக்காய் போன்றவற்றை உணவிலிருந்து விலக்கிக்கொள்ளவேண்டும்.

**பி. தமிழரசி**
உதவிப்பேராசிரியர், இளங்கலை வணிகவியல் (கணினி பயன்பாடு) துறை

## நட்பு

"காலம்
நமக்காகக் காத்திருப்பதில்லை.
என் நட்பு
உன் நட்புக்காகக் காத்திருக்கும்."

**ர. முகேஷ்**
இளங்கலை வணிகவியல் கணினி பயன்பாடு முதலாண்டு 'இ' பிரிவு

## பற்றியெரிகிறது போதிமரம்

"எங்கு போகிறது மனித சிந்தனை?
என்ன ஆனது மனிதாபிமானம்?
மனித இனமே மனிதனைக் கொன்று
முடிவில் சாதிக்கப் போவது என்ன?

ஒருவரை ஒருவர் அழித்துக்கொல்லும்
தீவிரவாதம் வளர வளர
மனித உயிர்கள் மரணம் காணும்
இப்பூமி முழுவதும் மயானமாகும்.

அமைதி போதித்த புத்த மடம்
அலங்கோலமானது மனிதச் செயலால்
மனிதனைச் சீண்டி சலித்துப்
போனவருக்கு இன்று
கடவுளே இலக்கானார்.

மனித எண்ணங்கள்
கீழ்த்தரமாய்ப் போனதால்
புனிதமான இடங்கள்கூட
இலக்குகளாய்...

அமைதி பிரார்த்தனை செய்ய
வந்தவர்களுக்கு இறுதி ஊர்வலம்
நடக்கலாமா?

மதங்கள் சொல்லும் சமாதானம்
போதிக்கச் சொன்ன
அன்பும் நேசமும்
கடைப்பிடிக்கச் சொன்ன

அன்பும் நேசமும்
கடைப்பிடிக்கச் சொன்ன
நீதி வழிகள் எல்லாம் இன்று
என்ன ஆனது?

ஒருவரை ஒருவர்
தோழமையோடு
ஒருவருக்கு ஒருவர்
உதவும் மனத்தோடு
கருணை கொள்ள
கடவுள் சொல்லியும்
காற்றில் விட்டான் அந்தப்
பாவிமனிதன்.

புதிது புதிதாய்க் கொள்கைகள்
கொண்டு துண்டாடுகிறான்
மனிதனை இன்று.
மதத்தால் தொடங்கி
நிறம் வரைக்கும்
நீள்கிறது அவனது பட்டியல்.

தீவிரவாதமே அவனது பாதை
கொலை செய்வதே
அவனது கொள்கை
நிம்மதி குலைப்பதே
அவனது நியாயம்
மனித உயிர்களே
அவனது இலக்கு.

எவருக்கோ தானே துன்பம் என்று
மறைவில் இயக்குகிறான் தீவிரவாதி.

*எறும்புக்குக் கூட இரக்கம் காட்டும்
ஏட்டுப் பாடங்கள் என்ன ஆனன?*

*மனிதனை வதைத்துப் போர் புரிவதால்
நீ புரிந்து கொண்ட கொள்கைதான்
என்ன மனிதா?*

*கொலைகார கொள்கைகளைக்
குப்பையில் போடுங்கள்.
துப்பாக்கிச் சப்தங்களுக்கு
ஓய்வைக் கொடுங்கள்.*

*குண்டுகள் அனைத்தையும்
செயலிழக்கச் செய்யுங்கள்.
மனிதாபிமானத்திற்குப்
புத்துயிர் கொடுங்கள்."*

***மூ. விவேக்குமார்***
*இளங்கலை வணிகவியல் கணினி பயன்பாடு
மூன்றாமாண்டு 'ஆ' பிரிவு*

## *பசி*

*"கொட்டும் மழையிலும்
அணைவதில்லை - ஏழையின்
பசியால் எரியும் வயிறு."*

***அஜித்***
*இளங்கலை வணிகவியல் கணினி பயன்பாடு
முதலாண்டு 'இ' பிரிவு*

## *ஒன்பது நற்குணங்கள்*

*"ஏழ்மையிலும் நேர்மை
கோபத்திலும் நிதானம்
தோல்வியிலும் விடாமுயற்சி
வறுமையிலும் செம்மை
துன்பத்திலும் தைரியம்
செல்வத்திலும் எளிமை
பதவியிலும் பணிவு
சேவையிலும் திருப்தி
எந்நிலையிலும் நன்றிமறவாமை."*

***தொகுப்பு:***
***அஜித்***
*இளங்கலை வணிகவியல் கணினி
பயன்பாடு முதலாண்டு 'இ' பிரிவு*

## *பொன்மொழி*

*விதைத்தவன் உறங்கினாலும்
விதைகள் உறங்குவதில்லை.*

*சோம்பலை நீ துரத்தியடித்தால் -
உன் சாம்பலும்கூட
நாளை சாதனை படைக்கும்.*

*இரு கைகள் கூப்பிக்
கடவுளை வணங்குவதைவிட
ஒரு கையை நீட்டி தர்மம் செய்.*

***கே. கிருஷ்ணராஜ்,***
*இளங்கலை வணிகவியல் கணினி
பயன்பாடு இரண்டாமாண்டு 'ஆ' பிரிவு*

## பெற்றதும் கொடுத்ததும்

"மலையே!
நீ உயர்ந்து மரம் வளர்த்தாய்
மரமே!
நீ வளர்ந்து மழை கொடுத்தாய்
மழையே!
நீ பொழிந்து மலர வைத்தாய்
மலரே!
நீ மலர்ந்து மணம் கொடுத்தாய்
மணமே!
நீ பரவி மயங்க வைத்தாய்
மனிதா!
நீ இயற்கைக்கு அழிவைத் தந்தாய்."

**அஜித்**
இளங்கலை வணிகவியல் கணினி பயன்பாடு
முதலாண்டு 'இ' பிரிவு

## வரம்

"குழந்தை அழும்பொழுது
ஆறுதல் சொல்லி
சமாதானப்படுத்தும்
வரத்தைக் கேட்டன
கடவுளிடம் பொம்மைகள்"

**ஆர். அரவிந்தன்**
இளங்கலை வணிகவியல் கணினி பயன்பாடு
இரண்டாமாண்டு 'ஆ' பிரிவு

## முரண்

"எச்சில் தடவி
சிலேட்டைத் துடைத்த
குழந்தையைக் கண்டித்த தந்தை
டி.வி.யில் கிரிக்கெட் போட்டியில்
பந்தில் எச்சில் தடவிய
பவுலரை ரசித்தார்."

**ஆர். அரவிந்தன்**
இளங்கலை வணிகவியல் கணினி
பயன்பாடு இரண்டாமாண்டு 'ஆ' பிரிவு

## புன்னகை

"கடலின் புன்னகை அலை
செடியின் புன்னகை பூ
காற்றின் புன்னகை தென்றல்
குயிலின் புன்னகை கூவுதல்
மரத்தின் புன்னகை நிழல்
மயிலின் புன்னகை
தோகை விரித்தல்
தாயின் புன்னகை
குழந்தையின் சிரிப்பு
நல்ல மனிதனின்
புன்னகை நாட்டுப்பற்று"

**எஸ். விஜய லட்சுமி**
இளங்கலை வணிகவியல் கணினி
பயன்பாடு முதலாண்டு 'இ' பிரிவு

## வெற்றி நிச்சயம்

"பதவி இருக்கும் வரை மரியாதை
பணம் இருக்கும் வரை ஆசை
நண்பர்கள் இருக்கும் வரை நட்பு
உறவுகள் இருக்கும் வரை பந்தம்
தன்னம்பிக்கை இருக்கும் வரை வெற்றி
முயற்சி செய்தால் வெற்றி நிச்சயம்"

**எஸ். விஜய லட்சுமி**

இளங்கலை வணிகவியல் கணினி பயன்பாடு
முதலாண்டு 'இ' பிரிவு

## பொன் மொழிகள்

யோசனையை யாரிடம் வேண்டுமானாலும் கேள். ஆனால், முடிவை நீ மட்டும் எடு.

வாழ்க்கை என்பது ஒரு வழிப்பாதை. அதை நாம் திரும்பிப் பார்க்கலாம் ஆனால், திரும்பிப் போக முடியாது.

உன் உள்ளம் அழும் போது நீ சிரி. ஆனால், மற்றவர் உள்ளம் அழும் போது நீ சிரிக்க வை.
நம்மை ஜெயிக்க யாரும் இங்குப் பிறக்க வில்லை என்பது பொய். ஆனால், மற்றவர்களை ஜெயிக்க நாம் இங்குப் பிறந்து இருக்கிறோம் என்பது தான் மெய்.

**எஸ். தினேஷ்**

இளங்கலை வணிகவியல் கணினி பயன்பாடு
முதலாண்டு 'இ' பிரிவு

## குழந்தையின் கதறல்

"பத்துமாதம் வயிற்றில் சுமந்த
என் அன்னையே!
ஆறுமாதம் இடுப்பில் சுமக்க
மறந்தாயே!

பல உறவுகளைக்
கொண்ட என்னை
தொப்புள்கொடி உறவோடு
அறுத்து விட்டாயே!

தாலாட்ட முடியாத
உனக்குத் தாய்மை எதற்கு?
பாலூட்ட முடியாத உனக்குப்
பிள்ளை எதற்கு?

நாய்கள் உறங்கும் குப்பையில்
நான் உறங்க வேண்டுமென்று
இறைவன் படைத்து விட்டானே!"

**கோ. தங்கவேல்**

இளங்கலை வணிகவியல் கணினி
பயன்பாடு மூன்றாமாண்டு 'ஆ' பிரிவு

## நட்பு

"காலையில் மலர்வது தாமரைப்பூ
மாலையில் மலர்வது அல்லிப்பூ
இரவில் மலர்வது முல்லைப் பூ
நாளும் மலர்வது நம் நட்பு(பூ)"

**கே. சௌந்தர்யா**

இளங்கலை வணிகவியல் கணினி
பயன்பாடு முதலாண்டு 'இ' பிரிவு

## தீக்குச்சி

"சீருடைகளையும் புத்தகங்களையும்
சுமக்கவேண்டிய இவர்கள் - இன்று
வறுமையின் காரணத்தால்
தீக்குச்சிகளைச் சுமக்கிறார்கள்..

இந்தப் பிஞ்சு விரல்களுக்குள்
அடக்கமாக வேண்டிய
தீக்குச்சி இன்று
இவர்களின் எஜமானன்.

விளக்கு ஏந்திப் படிக்க
வேண்டிய இந்தப் பிஞ்சுவிரல்கள்
விளக்கை ஏற்றிவைக்கும்
தீக்குச்சிகளுக்குச்
சேவைபுரிய துவங்கிவிட்டன.

இந்த வருங்கால சந்ததியினருக்குக்
கல்வி விளக்கை நாம் ஏற்றினால்
நாளைய வளர்ந்த சமூகத்தைக்
காணலாம்."

**ரா. மைதிலி**
இளங்கலை வணிகவியல் கணினி பயன்பாடு
முதலாண்டு 'இ' பிரிவு

## பனித்துளி

"விடிய விடிய நிலாவைக் காதலித்து
விடிந்ததும் சூரியனோடு சென்றுவிடும்
பெண்தான் பனித்துளி."

**எஸ். ராமச்சந்திரன்**
இளங்கலை வணிகவியல் கணினி பயன்பாடு
முதலாண்டு 'இ' பிரிவு

## உயிரில் கலந்த நட்பு

"நட்பு போல் ஒரு
வார்த்தை இல்லை
நண்பன் போல் ஓர்
உறவு இல்லை.

நட்பு இல்லாமல்
வாழ்க்கை வாழ்ந்தால்
இவ்வுலகில் வாழ்ந்தும்
பயனில்லை.

வானமும் இதனைத்
தடுப்பதில்லை
பூமியும் இதை
மறுப்பதில்லை.

காலமும் இதற்காகக்
காத்திருக்கும்
கவிதையும் இதற்காகத்தான்
காத்திருக்கும்.

நட்புக்காக எதையும்
இழக்கலாம். ஆனால்,
எதற்காகவும் நட்பை
இழக்கக்கூடாது."

**பி. தமிழரசன்**
இளங்கலை வணிகவியல் கணினி
பயன்பாடு முதலாண்டு 'இ' பிரிவு

## எறும்பின் பெரிய வேலை

நம் வீடுகளில் இருக்கும் எமது உணவை உண்டு வாழும் எறும்புகள் பற்றி நாம் யாருமே பெரிதாகச் சிந்திப்பதில்லை.

நம்மைவிட அளவில் மிகச்சிறிய அதாவது நம்மைவிட 10000 மடங்கு சிறிய எறும்புகளைப் பற்றிய செய்திகள் சிலவற்றைக் காண்போம்.

பூமியில் உள்ள மொத்த எறும்புகளில் எண்ணிக்கை பூமியில் உள்ள மொத்த மனிதர்களில் எண்ணிக்கைக்குச் சமமானது என அறிவியல் ஆய்வுகள் கூறுகின்றன.

எறும்புகள் டைனோசர்களின் காலத்தில் இருந்தே இருக்கின்றன. எறும்புகளில் குறிப்பிடத்தக்க பரிமாணம் நடைபெற்று சுமார் 130 மில்லியன் ஆண்டுகள் ஆகின்றன.

10000 முதல் 12000 வரையிலான வகைகள் எறும்புகளில் உள்ளன. உலகம் முழவதும் எறும்புகள் உள்ளன.

ஒவ்வொரு எறும்பும் தன்னுடைய எடையை விட 20 முதல் 50 மடங்கு எடையினைச் சுமக்க வல்லது.

எறும்புகள் மிகச்சிறியன. ஆனால் மூன்று இன்ஞ் வரை நீளம் உள்ளன.

எறும்புகள் கூட்டமாகத்தான் வாழும். இக்கூட்டத்தைக் காலனி என்பர். இதுவரை கண்டறியப்பட்ட எறும்புகளின் காலனியில் அதிக தூரம் உள்ளதாக 5800கிலோமீட்டர் உடைய ஓர் எறும்புக்கூட்டத்தைக் (காலனியை) 2002ஆம் ஆண்டு இத்தாலி-ஸ்பெயின் எல்லையில் கண்டுபிடித்தனர்.

**க. அரவிந்தசாமி**
இளங்கலை வணிகவியல் கணினி
பயன்பாடு மூன்றாமாண்டு ‘ஆ’ பிரிவு

## உறவுகள்

“உறவுகள் எனும் ஆழ்கடலில்
முத்துக்கள் எடுக்க முடியும்
வெறுப்பு எனும் கடலில்
ஒரு சிறு கல்லைக்கூட
எடுக்க முடியாது.”

**சி. சுந்தரப்பிரகாஷ்**
இளங்கலை வணிகவியல் கணினி
பயன்பாடு முதலாண்டு ‘ஆ’ பிரிவு

## அனுபவம்

"கட்டடம் தேவையில்லை
வகுப்பறை தேவையில்லை
பள்ளிக் கூடம் தேவையில்லை
அனுபவம் ஒன்றே போதும்.
ஆம்!
வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும்
புதுக்கலையைக் கற்க மறந்தவன்
வாழ்க்கையில் வாழும் கலையை
மறந்தவனே."

**ரா. நந்தகுமார்**
இளங்கலை வணிகவியல் கணினி பயன்பாடு
முதலாண்டு 'இ' பிரிவு

## வெற்றி

"அன்னையைத் தெய்வமாக வணங்கி
ஆக்கத்தை ஊக்கமாக்கி
இளைஞர்கள் வாழ்வு மலர
ஈட்டியாய்த் திட்டம் தீட்டி
உண்மையாக உழைத்திட
ஊமையரும் துதித்திட
எண்ணங்கள் பல தோன்றி
ஏக்கங்களை வழிகளாக்கி
ஐயமின்றி புறப்படு
ஒன்று மட்டும் உண்மை
ஓங்கிய புகழோடு
வெற்றி நிச்சயம்."

**டி. கவின்குமார்**
இளங்கலை வணிகவியல் கணினி பயன்பாடு
முதலாண்டு 'ஆ' பிரிவு

## பாசம்

"பாசமுள்ள நெஞ்சங்கள்
பழிவாங்க நினைப்பதில்லை
நேசமுள்ள நெஞ்சங்கள்
நேசிக்க மறப்பதில்லை
பிரியமுள்ள நெஞ்சங்கள்
பிரிவைக்கூடத் தாங்குவதில்லை."

**பி.வி. மஞ்சுபார்கவி**
இளங்கலை வணிகவியல் கணினி
பயன்பாடு முதலாண்டு 'இ' பிரிவு

## நட்பு

"நட்பு இரவில் தோன்றும்
நிலவும் அல்ல.
பகலில் தோன்றும்
சூரியனும் அல்ல. என்றும்
நிலைத்திருக்கும்
வானம் போன்றது."

**சுரேஷ்**
இளங்கலை வணிகவியல் கணினி
பயன்பாடு முதலாண்டு 'இ' பிரிவு

## அம்மா

"ஆசையாய் முத்தமிட்டு
அன்பெனும் சாரெடுத்து
பாசமெனும் பழத்தினுள்
வாய்க்கப்பெற்ற என் உயிரே!"

**எல். லாவண்யா**
இளங்கலை வணிகவியல் கணினி
பயன்பாடு முதலாண்டு 'இ' பிரிவு

## நஷ்டம்

"நிலம் மழைத்துளியை
ஏற்க மறுத்தால்
நஷ்டம் மழைத்துளிக்கு அல்ல.
தேனிக்கள் பூக்களைச்
சேர மறுத்தால்
நஷ்டம் பூக்களுக்கு அல்ல.
சூரியனைத் தாமரை
பார்க்க மறுத்தால்
நஷ்டம் சூரியனுக்கு அல்ல.
வெற்றியைத் தேடி
நீ செல்ல மறுத்தால்
தோல்வி வெற்றிக்கு அல்ல."

**இ. சுரேந்திரன்**
இளங்கலை வணிகவியல் கணினி பயன்பாடு
மூன்றாமாண்டு 'இ' பிரிவு

## வாழ்க்கை வாழ்வதற்கே

"வான்மேகங்கள் மோதிப்பிரிந்தால்தான்
பூமிக்கு மழை.
விதைகள் பூமியை முட்டிப்
பிளந்தால்தான் நிலத்தில் செடி.
பூக்கள் காய்த்தால்தான் சுவையான
கனி கிடைக்கும்.
வாழ்வில் தோல்வியைத் துறந்தால்தான்
வெற்றி உதிக்கும்."

**டி. கவின்குமார்**
இளங்கலை வணிகவியல் கணினி பயன்பாடு
முதலாண்டு 'ஆ' பிரிவு

## அம்மாவின் பாசம்

"மழைக்குத்தான்
உன்மீது எவ்வளவு ஆசை
அம்மா உன்னைப் பார்க்க வேண்டும்
என்கிற ஆர்வத்தில்
துளிகளாக வராமல்
அவசர அவசரமாக
ஆலங்கட்டிகளாகவே
பூமியை வந்தடைகின்றன.
அம்மா! உன் பாசத்தை ரசிக்க..."

**பி. நீலகண்டன்**
இளங்கலை வணிகவியல் கணினி
பயன்பாடு முதலாண்டு 'ஆ' பிரிவு

## தெரியுமா?

கர்நாடக சங்கீதத்தில் உள்ள ஏழு ஸ்வரங்களின் பொருள் தெரியுமா?

**ச - சட்ஜம்**
**ரி – ரிஷபம்**
**க – காந்தாரம்**
**ம – மத்திமம்**
**ப – பஞ்சமம்**
**த – தைவம்**
**நி – நிபாதம்**

**வி. மணிகண்டன்**
இளங்கலை வணிகவியல் கணினி
பயன்பாடு முதலாண்டு 'ஆ' பிரிவு

## வெற்றியின் புன்னகை

“ஒவ்வொரு நொடியும்
வியர்வைப் பூக்கள்
மலர்ந்தால்
இரவில்லாப் பகலாக
உன் வாழ்க்கை அமையும்”

**ஆர். அபிநயா**
இளங்கலை வணிகவியல் கணினி பயன்பாடு
மூன்றாமாண்டு ‘அ’ பிரிவு

## தெரியுமா?

பல வகையான துப்பாக்கிகள் உண்டு. அவற்றைக் கண்டுபிடித்தவர்கள் யாரென்று தெரியுமா?
துப்பாக்கிக் குண்டு – ரோஜர் பேகன்
மெஷின்கன் - டாக்டர் கேட்டிங்
நீண்ட துப்பாக்கி – சாமுவேல் கோல்ட்
ரிவால்வர் - ரிச்சர்டு கேட்டிங்
குழல் துப்பாக்கி – சாமுவேல் கோல்ட்
சைலன்சர் துப்பாக்கி – மாக்சிம்
கைத்துப்பாக்கி – கர்மினெலியா
ஏ.கே. 47 – கலாஷ் நிக்காய்
இயந்திர துப்பாக்கி – ஜேம்ஸ் பக்கிள்

**வி. மணிகண்டன்**
இளங்கலை வணிகவியல் கணினி பயன்பாடு
முதலாண்டு ‘ஆ’ பிரிவு

## என் அம்மா

“மலரின் இனிமை கொண்டவள் நீ.
தியாகத்தின் உறைவிடம் நீ.

என்றும் எனக்காக வாழ்பவள் நீ.
புன்னகையே என்றும் நீ
அணியும் நகை.

ஒருநாளும் முகம் சுளித்து
வசைமொழி பேசவில்லை நீ.

மனம் கலங்கும் போது
இன்றுபோல் என்றும்
கருணை காட்டினாய்.

துன்பத்திலும் துயரத்திலும்
என் துணை நின்றாய்.

ஒரு நாளும் என் உணர்வுகளை
நீ பந்தாட நினைத்தது இல்லை.

என்றும் பல பிறவிகளிலும்
என் தாயாக வேண்டும் என்று
இறையை வேண்டுகிறேன்.

**வி. சுரேஷ்**
உதவிப்பேராசிரியர், இளங்கலை
வணிகவியல் (கணினி பயன்பாடு) துறை

## பணக்காரர்கள் - சில குறிப்புகள்

***உலகின் முதல் பத்துப் பெரிய பணக்காரர்கள் யாரென்று உங்களுக் குத் தெரியுமா?***

*கார்லோ ஸில்ம் ஹேலு, பில்ஹேட்ஸ், வாரன் பப்பேட், பெர்னால்ட் அர்னால்ட், லாரி மிட்டல், அமான்சியோ ஆர்டிகா, எய்கே படிஸ்டா, முகேஷ் அம்பானி, கிரிஸ்டி வால்டன் குடும்பத்தினர் ஆகிய பத்து பேர்தான் உலகின் முதல் பத்துப் பெரிய பணக்காரர்கள். இவர்களுள் முதலிடம் பிடித்துள்ள கார்லோ ஸில்ம் ஹேலு 74 பில்லியன் டாலர்களுக்குச் சொந்தக்காரர். நம் நாட்டுக்காரரான முகேஷ் அம்பானி 22.6 பில்லியன் டாலர்களுக்குச் சொந்தக்காரர்.*



***இந்திய அளவில் முதல் பத்துப் பெரிய பணக்காரர்கள் யாரென்று உங்களுக்குத் தெரியுமா?***

*முகேஷ் அம்பானி, லட்சுமி மிட்டல், அசிம் பிரேம்ஜி, சசி மற்றும் ரவி ருயா, சாவித்ரி ஜிண்டால், சுனில் மிட்டல், கௌதம் அதானி, குமார மங்கலம் பிர்லா, பலான்ஜி மிஸ்ரி, அடி ஹோத்ரேஜ் ஆகிய பத்து பேர்தான் இந்திய அளவில் முதல் பத்துப் பெரிய பணக்காரர்கள்.*



***இந்திய அளவில் வணிகத்துறையில் கொடிகட்டிப் பறக்கும் பத்துப் பெண்மணிகள் வருமாறு:***

*வினிதா பாலி, ரேணுகா ராம்நாத், ரேணு சுத் கர்னாட், வனிதா நாராயண், பல்லவி ஷராப், சுப்லட்சுமி பான்சே, வனிதா சின் ஹானியா, பிரியா நாயர், அஞ்சலி பான்சால், சொருபா சன்யால்.*




**முனைவர் மெ. வித்யா**
உதவிப்பேராசிரியர், இளங்கலை
வணிகவியல் (கணினி பயன்பாடு) துறை.

## தூரிகையின் மொழி - 01




ஓவியம்: கே. கிருஷ்ணராஜ்,
*இளங்கலை வணிகவியல் கணினி பயன்பாடு*
*இரண்டாமாண்டு 'ஆ' பிரிவு*


## தூரிகையின் மொழி – 02



## தூரிகையின் மொழி – 03



## தூரிகையின் மொழி – 04



## பன்னாட்டுப் பணம் சார்ந்த முறை

பன்னாட்டுப் பணம் சார்ந்த முறை என்பது உலக அந்நியச் செலாவணிச் சந்தையில் நிலவும் ஒருமுறை ஆகும்.

இதன் மூலமே பன்னாட்டு வாணிபமும் மூலதனத்தின் இடப் பெயர்ச்சிகளும் நிதியிடப் படுகின்றன மற்றும் மாற்று வீதம் நிர்ணயிக்கப் படுகிறது.

இரண்டாவது உலகப்போர்க் காலத்தில் இருந்தே பன்னாட்டுப் பொருளாதாரமானது வங்கியர், பொருளியல் வல்லுநர்கள், அரசியல் வாதிகள், பன்னாட்டுப் பொது ஊழியர்கள் ஆகியோர் மனத்தில் ஊடுருவி வருகிறது.

பன்னாட்டுப் பணம்சார்ந்த முறையின் நான்கு கூறுகள் உள்ளன.

1. மற்ற நாடுகளுக்குச் செலுத்தித் தீர்க்க வேண்டிய இருப்புகளைத் தீர்ப்பதற்கும் காப்புகளை உருவாக்கி நிர்வகிக்கவும் உதவும் பன்னாட்டுப் பணச் சார்பு.
2. ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய வங்கியியல் முறைகள், பணச் சந்தைகள், அந்நியச் செலாவணிச் சந்தைகள் போன்ற வடிவிலான நிறுவனம் சார்ந்த ஏற்பாடுகள். இவற்றின் மூலமே பன்னாட்டுப் பணமானது முறை நெடுகிலும் ஓடுகிறது.
3. பன்னாட்டுப் பணத்தின் பகிர்ந்தளிப்பு சரிக்கட்டப் படக்கூடிய ஒருமுறை.
4. பன்னாட்டுப் பணம் சார்ந்த ஏற்பாடுகளின் இயக்கத்தைக் கட்டுப்படுத்தும் அதிகாரம்.

**பி.எஸ். கீர்த்தி**

உதவிப்பேராசிரியர், இளங்கலை வணிகவியல் (கணினி பயன்பாடு) துறை.

## கனமான செய்தி

ஒவ்வொரு கிரகத்திலும் மனிதனின் எடை மாறுபடும் பூமியில் 60 கிலோ எடையுள்ள மனிதன் மற்ற கிரகங்களுக்குச் சென்றால் எடை என்னவாக இருக்கும்?

சூரியனில் 1680 கிலோ
வெள்ளியில் 51.6 கிலோ
சந்திரனில் 0.987 கிலோ
புதனில் 21.6 கிலோ
செவ்வாய் 22.8 கிலோ
வியாழனில் 159.0 கிலோ
சனியில் 68.4 கிலோ
யுரெனஸில் 57.6 கிலோ
நெப்டியூனில் 60.0 கிலோ

**திருமணிகண்டன்**

இளங்கலை வணிகவியல் கணினி பயன்பாடு மூன்றாமாண்டு 'இ' பிரிவு

## இப்படிக்குப் பஞ்சம்

"செல்வமும் செழிப்பும்
செழித்த நம் நாட்டில்
வந்தவர் போனவர் வாரியது போக
எஞ்சிய செல்வம் நான் தானய்யா!

எந்தன் செழிப்போ பசியும் பட்டினியும்
எந்தன் அடிமையோ
உந்தமிழ் மக்களே!
சேற்றில் கால்வைத்த சான்றோரெல்லாம்
சேவகம் செய்யவே செய்தேனய்யா!

சோற்றுக்கு வழியில்லா
சோதனையில்
மாந்தரை ஊண் ஆக வைத்தேனய்யா

எம்மை நீக்க நினைத்தவரெல்லாம்
எம்மால் நீங்கிப் போனவரய்யா

எந்தன் நிலையை எண்ணிப் பார்த்தால்
தண்ணீரும் கண்ணீராய் ஆனதய்யா!

என் நிலையை நீக்க
எவரும் இல்லையோ
என்று கதறுகிறேன் இன்று.
மடல் ஒன்றும்
எட்ட வில்லையே உமக்கு.
இப்படிக்குப் பஞ்சம்.

**ப. விஜயசந்திரிகா**
இளங்கலை வணிகவியல் கணினி பயன்பாடு
இரண்டாமாண்டு 'ஆ' பிரிவு

## விடுகதைகள்

ஐந்தே இதழ்கொண்ட அழகிய தண்டுத் தாமரை எது?

**உள்ளங்கை**

துள்ளி விளையாடும் என்னைத் தூக்கிலே தொங்க வைப்பர். தூக்கிலே தொங்கிய என்னை நாக்கிலே வைத்து ருசி காண்பர். நான் யார்?

**மீன்**

உரலுக்கு ஒருபக்கம் இடி. எனக்கு இருபக்கமும் இடி. நான் யார்?

**மத்தளம்.**

அக்கா விதைத்த முத்து. அள்ள முடியாத முத்து. எது என்ன?

**கோலம்.**

மூன்று இறக்கை கொண்ட பறவை. அது என்ன?

**மின்விசிறி.**

இரட்டைக் குழந்தைகள். ஒன்று கேள்வி கேட்கும். மற்றொன்று அதற்கு விடை கொடுக்கும். அவர்கள் யார்?

**தராசு**

மண்ணுக்குள் பிறக்கும். மங்கைய ருக்கு அழகு தரும். அது என்ன?

**மஞ்சள்.**

*கற்கண்டுக் கன்னிக்குக் கண்ணாடி சீலை உடுத்தி. காசுக்கே விற்கின் றார். அது என்ன?*

***சாக்லேட்.***

*இரவெல்லாம் பூக்காடு. பகலெல்லாம் வெறுங்காடு. எது என்ன?*

***வானம்***

*அண்ணன் இனிப்பு. தம்பி புளிப்பு. தங்கை மட்டும் மணப்பாள். அவர்கள் யாவர்?*

***பால், தயிர், நெய்.***

***தொகுப்பு:***

***எம். பன்னீர் செல்வம்***

*இளங்கலை வணிகவியல் கணினி பயன்பாடு இரண்டாமாண்டு 'ஆ' பிரிவு*

## *திருமணம்*

*"**பத்துப்** பொருத்தங்கள் பார்த்து*
***ஒன்பது** கோள்களின் நிலையறிந்து*
***எட்டு** உறவினர்களை அழைத்து*
***ஏழு** அடி எடுத்து வைத்து*
***அறுசுவை** உணவு படைத்து*
***பஞ்ச**பூதங்களைச் சாட்சியாக வைத்து*
***நான்கு** வேதங்கள் முழங்க*
***மூன்று** முடிச்சுகளால்*
***இரு** மனங்கள் ஒன்று சேரும்*
***ஓர்** அற்புதப் பந்தத்தின் பெயர்தான்*
*திருமணம்."*

***பி. தினேஷ்***

*இளங்கலை வணிகவியல் கணினி பயன்பாடு முதலாண்டு 'ஆ' பிரிவு*

## *நிஜம்*

*"நேற்று என்பது கனவு*
*நாளை என்பது ஆசை*
*இன்று என்பது நிஜம்*
*அது மட்டுமே உண்மை."*

***ஆ. பானுப்பிரியா***

*இளங்கலை வணிகவியல் கணினி பயன்பாடு இரண்டாமாண்டு 'ஆ' பிரிவு*

## *நேரம்*

*"சூரியன் மறைந்தால்*
*அது மாலைநேரம்.*
*நிலவு மறைந்தால்*
*அது பகல்நேரம்.*
*நம் நட்பு மறைந்தால்*
*அது வாழ்வின்*
*இறுதி நேரம்."*

***ஆர். சூர்யா***

*இளங்கலை வணிகவியல் கணினி பயன்பாடு முதலாண்டு 'இ' பிரிவு*

## *வெல்க*

*"நல்லதை என்றும் நினைத்திடு*
*கெட்டதை என்றும் மறந்திடு*
*பயத்தை என்றும் அழித்திடு*
*தோல்வியை என்றும் எதிர்த்திடு*
*வெற்றிக்கு என்றும் முயன்றிடு"*

***என். அருணிஷ்***

*இளங்கலை வணிகவியல் கணினி பயன்பாடு முதலாண்டு*

## என் தாயும் ஒரு போதிமரம்

"பட்டப் படிப்புகள் முடிந்திடவே
திட்டும் பணிகளும் தொடங்கிடவே
எட்டிப் பிடித்திடும் கனியுமில்லை
தொட்டுப் பார்க்கவும் முடியவில்லை.

தந்தையின் முகமதில் வெறுப்புகளும்
அண்ணனின் மனத்தில் அலட்சியமும்
கனலெனக் கண்களைத் தீண்டிடவே.

புயலென நானும் புறப்படவே
ஆயிரம் பேருடன் போட்டியிலே
ஆதியிலே என்னை விரட்டினரே
வீதியில் திரிகின்ற நாயினைப் போல்
வேலையைத் தேடி அலைகையில்
அன்னையின் வார்த்தைகள்
செவிகளிலே இனிமையின்
ஓசையைச் சேர்ந்திடவே.

எத்தொழிலும் செய்தாலும் என்மகன்
உத்தமன் என்று அவள் கூறிடவே.

நான் போற்றிட வேண்டிய
உண்மையான
போதிமரம் என் தாய்தான்."

**மூ. விவேக்குமார்,**
இளங்கலை வணிகவியல் கணினி பயன்பாடு
மூன்றாமாண்டு 'ஆ' பிரிவு

## வேண்டும் வேண்டும்

"அமைதிக்காக உலகம்
விடிய வேண்டும்.
வானோக்கி எண்ணங்கள்
உயர வேண்டும்.

நன்மை மிக்க நட்பு
என்றும் தொடரவேண்டும்.
தாயென்று பெண்ணை
மதிக்க வேண்டும்.


உறுதிபட பேசும் மனம் வேண்டும்.
உள்ளம் நம் சொல்லைக்
கேட்க வேண்டும்.
வயதுக்கேற்ற வாழ்க்கை வேண்டும்.
நேர்மைமிக்க குணம் வேண்டும்.

காற்றைப் போல்
சிந்தனையைப் பரப்ப வேண்டும்.
பொய் சொன்னால் சுடுகின்ற
நாவும் வேண்டும்.


காலத்தின் மாற்றத்தை
மதிக்க வேண்டும்.
உதடுகள் என்றும்
சிரிக்க வேண்டும்."

**எம். ராஜலட்சுமி**
இளங்கலை வணிகவியல் கணினி
பயன்பாடு இரண்டாமாண்டு 'ஆ' பிரிவு


***தூரிகையின் மொழி – 05***



***தூரிகையின் மொழி – 06***



## தூரிகையின் மொழி – 07



# Reserve Bank Governor

**Raghuram Govinda Rajan** (is the current and the 23rd Governor of the Reserve Bank of India.

He was born in 1963 in Bhopal, Madhya Pradesh, India. He graduated from the Indian Institute of Technology, Delhi with a bachelor's degree in electrical engineering in 1985, after which he acquired a Post Graduate Diploma in Business Administration from the Indian Institute of Management Ahmedabad in 1987. He received a PhD in Management from the MIT in 1991 for his thesis titled "Essays on Banking". Raghuram is married to Radhika Puri, a classmate from IIM Ahmedabad. They have two children.





After graduation, Rajan joined the Booth School of Business at the University of Chicago. He was the Chief Economist at the Interna tional Monetary Fund (IMF) from October 2003 to December 2006. In November 2008, Indian Prime Minister Dr. Manmohan Singhap pointed Rajan as an honorary economic adviser. That same year, a high-level committee on financial reforms, headed by Rajan, submitted its final report to the Planning Commission.

Replacing Kaushik Basu, Rajan was appointed as Chief Economic Advisor to the Government of India on 10 August 2012. He also prepared the Economic Survey for India for the year 2012-13, on 27th of February. On August 6, 2013 it was announced that Rajan would take over as the next RBI Governor. He was appointed RBI Governor for a term of 3 years succeeding D Subbarao whose term ended on 4 September 2013.

In 2005, at a celebration honoring Alan Greenspan, who was about to retire as chairman of the US Federal Reserve, Rajan delivered a

controversial paper that was critical of the financial sector.

The response to Rajan's paper at the time was negative. For example, former U.S. Treasury Secretary and former Harvard PresidentLawrence Summers called the warnings “misguided” and Rajan himself a "luddite". However, following the 2008 economic crisis, Rajan's views came to be seen as prescient; by January 2009, *The Wall Street Journal* proclaimed that now, "few are dismissing his ideas." In fact, Rajan was extensively interviewed on the global crisis for the Academy Award winning documentary film Inside Job. Rajan wrote in May 2012 that the causes of the ongoing economic crisis in the U.S. and Europe in the 2008–2012 period were substantially due to workforce competitiveness issues in the globalization era, which politicians attempted to "paper-over" with easy credit. He proposed supply-side solutions of a long-term structural or national competitiveness nature: "The industrial countries should treat the crisis as a wake-up call and move to fix all that has been papered over in the last few decades... Rather than attempting to return to their artificially inflated GDP numbers from before the crisis, governments need to address the underlying flaws in their economies. In the United States, that means educating or retraining the workers who are falling behind, encouraging entrepreneurship and innovation, and harnessing the power of the financial sector to do good



while preventing it from going off track. In southern Europe, by contrast, it means removing the regulations that protect firms and workers from competition and shrinking the government's presence in a number of areas, in the process eliminating unnecessary, unproductive jobs."

During May 2012, Rajan and Paul Krugman expressed alternate views on how to reinvigorate the economies in the U.S. and Europe, with Krugman mentioning Rajan by name in an opinion editorial. In an article in *Foreign Affairs* magazine, Rajan had advocated structural or supply-side reforms to improve competitiveness of the workforce to better adapt to globalization, while also supporting fiscal austerity measures (e.g., raising taxes and cutting spending). Rajan conceded that austerity could slow economies in the short-run and cause significant "pain" for certain constituencies. Krugman rejected this view, advocating instead traditional Keynesian fiscal stimulus (e.g., spending and investment) and monetary stimulus, arguing the primary factor slowing the developed economies was a general shortfall in demand across all sectors of the economy, not structural or supply-side factors that affected particular sectors. This debate occurred against the backdrop of a significant "austerity vs. stimulus" debate occurring at the time, with some economists arguing one side or the other or a combination of both strategies.

In 2003, he won the Fischer Black Prize awarded by the American Finance Association for contributions to the theory and practice of finance by an economist under age 40. He was awarded the fifth Deutsche Bank Prize for Financial Economics 2013 on 26 September 2013 for his "ground-breaking research work which influenced financial and macro-economic policies around the world".



## நாளையின் நாயகன்

"விடியல் தூரம் இல்லை
விழித்தெழு தோழா!
காரிருள் மறையட்டும்
கழனியெல்லாம் செழிக்கட்டும்
கனவுகள் பழிக்கட்டும்
கிளர்ந்தெழு தோழா!
இன்றைய உலகம்
இளைஞர்கள் கையில்
நாளைய உலகை
நலமாக்க நீ எழுவாய்
சிந்தனை வளமானால்
விந்தை உலகம் நீ படைப்பாய்"

**நா.த. ராஜ்கமல்**
இளங்கலை வணிகவியல் கணினி பயன்பாடு
இரண்டாமாண்டு 'அ' பிரிவு

## தத்துவக் கவிதைகள்

### வாழ்க்கை

நாம் வாழும் வரை நம்மை
யாரும் வெறுக்கக் கூடாது
வாழ்ந்து முடித்த பின்பு நம்மை
யாரும் மறக்கக் கூடாது.

### தகுதி

நீ எதையும் தேடிப் போகாதே!
உனக்குத் தகுதி இருந்தால்
அது உன்னைத் தேடி வரும்.

**சித்திக் பாட்ஷா**
இளங்கலை வணிகவியல் கணினி பயன்பாடு
முதலாண்டு 'இ' பிரிவு

## பெண் சிசுக்கொலை

"நாட்டில் எத்தனையோ
பால்வகைகள் இருந்தும்
நீ எனக்கு மட்டும் ஏன்
ஊற்றினாய் அன்னையே அந்தக்
கள்ளிப்பாலை?.
பெண்ணாய்ப் பிறப்பது
குற்றமென்றால் அன்று
உன் தாய் வயிறே
உனக்கும் சுடுகாடுதானே!
'பெண்கள் நாட்டின் கண்கள்'
ஐயகோ! என் கண்ணையும் கூட
என்னால் திறக்க முடியவில்லையே.
விண்வெளியில் வீர சாகசம் செய்த
கல்பனா சாவ்லா எங்கே!
என் வீதி சாக்கடையில்
பிணமாய் வீழ்ந்திருக்கும்
நான் எங்கே!
ஏய் பெண்ணே!
இதோ குறித்துக்கொள்
என் தாய்த் திருநாட்டில்
நான் மீண்டும்
பெண்ணாப் பிறப்பேன்.
ஏதாவது சாதித்த பின்னே
இறப்பேன்.
வந்தே மாதரம்."

**ரா. சுகன்யா**
இளங்கலை வணிகவியல் கணினி
பயன்பாடு இரண்டாமாண்டு 'அ' பிரிவு

## கும்பகோணத்தில் மகாவதம்

“பள்ளியில் அடுப்பு மூட்டியது
பிள்ளைகள் சாப்பிடவா?
பிள்ளைகளைச் சாப்பிடவா?

இறந்தவர்களுக்குத்தான்
ஏரியூட்டுவார்கள்...
மல்லிகைப் பூக்களுக்கா
கொள்ளி வைப்பது?

மதுரையை எரித்த கனல்
கண்ணகியின் மார்பு.
கும்பகோணத்தில்
கொளுந்துவிட்ட நெருப்பில்
பற்றி எரிகின்றன
பாலூட்டிய மார்புகள்.

விதியின் விளையாட்டு மைதானம்
விசித்திரமானது.

தமிழ்நாட்டில் தண்ணீரை
ஒளித்து வைத்துவிட்டு
வெறிபிடித்த நெருப்பை
விளையாடச் சொல்கிறது.”

**வி.கனகேஸ்வரி**
இளங்கலை வணிகவியல் கணினி பயன்பாடு
முதலாண்டு ‘இ’ பிரிவு

## அறிந்துகொள்வோம்

ஆங்கிலத்தில் ஐந்து கண்டங்களின் பெயர்களும் A யில் தொடங்கி A யில் முடிகின்றன.

Asia
Africa
America
Australia
Antartica

பூட்டானில் திரையரங்குகள் இல்லை.

உலகிலேயே சீனாவில்தான் அதிகமாக சைக்கிள் பயன்டுத்துகிறார்கள்.

பெண்களுக்கு ஓட்டுரியையை முதன்முதலாக நியூசிலாந்து நாடுதான் கொடுத்தது.

அமெரிக்காவைக் கண்டுபிடித்த கொலம்பஸ் தான் இறக்கும்வரை அதனை இந்தியா என்றே நம்பினார்.

உலகில் 26 நாடுகளில் கடற்கரை இல்லை.

மனித நுரையீரலில் 15இலட்சம் அறைகள் உள்ளன.

ஆக்டோபசுக்கு மூன்று இதயம் உண்டு.

ஈசலுக்கு வயிறு இல்லை.

**ஆர்.கே. நந்தகுமார்,**
இளங்கலை வணிகவியல் கணினி
பயன்பாடு மூன்றாமாண்டு ‘அ’ பிரிவு

## தந்தையின் அன்பு

"புதியதொரு உலகினைக்
கண்டதுபோல
சிறகுகள் முளைத்து
பறப்பது போல
புதியதாய் மலர்ந்த
மலரினைப்போல
ஆயிரம் இன்பங்கள் நான்
அறிந்தது போல
என மகிழ்ச்சிக்கு அந்த
வானம்கூட எல்லையில்லை.
ஆம் தந்தையே
உன் பாசம்
என்னிடம்
இருந்த போது நான்
கூடக் கண்ட ஆனந்தத்திற்கு
அந்த வானம் கூட
எல்லையில்லை.

**ஆர். ஆனந்தி**
இளங்கலை வணிகவியல் கணினி பயன்பாடு
இரண்டாமாண்டு 'அ' பிரிவு

## வாழ்க்கை நாடகமல்ல

"பாசக்கார மகனிடம்
தந்தை சொல்கிறார்...

நடிக்கத் தெரிந்த எனக்கு
உன்னிடம் மட்டும்
நடிக்கத் தெரியவில்லை.
என் பிறப்பிலிருந்து
உன் மனத்தை மட்டும்
புரிந்து வாழ்ந்து வருவதால்."

**மு. சுகன்யா**
இளங்கலை வணிகவியல் கணினி
பயன்பாடு இரண்டாமாண்டு 'ஆ' பிரிவு

## தாய்ப் பாசம்

"கருவறையில் உயிர்கொடுத்து
உன் கருவிழியில் என்னை
நிறைத்து
கண் இமையாய் என்னைக் காக்கும்
என் தாயும் தெய்வமே
உனக்கே எந்தன்
முதல் வணக்கம்!"

**ஆர். ஆனந்தி**
இளங்கலை வணிகவியல் கணினி
பயன்பாடு இரண்டாமாண்டு 'அ' பிரிவு

## எதிர்நீச்சல்

"வாழ்க்கையில் நிரந்தரமாக
வருவது அலைச்சல்.
அதை சமாளிக்கத்
தேவை துணிச்சல்
எதற்கும் துணிந்தால்
நீயும் அடிக்கலாம்
வாழ்வில் எதிர்நீச்சல்.

**என். அருணிஷ்**
இளங்கலை வணிகவியல் கணினி
பயன்பாடு முதலாண்டு

## சிறப்புச் சொற்பொழிவு

09.10.2013 அன்று காலை 10.00 மணி முதல் மதியம் 01.30 மணி வரை தமிழ்த்துறையில் சிறப்புச் சொற்பொழிவு நடைபெற்றது.

சிறப்புச் சொற்பொழிவாளராக தஞ்சைப் பல்கலையின் சுவடியியல் துறைப் பேராசிரியர் முனைவர் கோவை மணி அவர்கள் வருகைதந்திருந்தார்.

அவர் ஓலைச்சுவடிகள் குறித்து மாணாக்கர்களுக்கு விரிவான விளக்கங்களை நல்கினார். ஓலைச்சுவடியியலில் சான்றிதழ் படிப்பு பயில்வதன் முக்கியத்து வத்தினை எடுத்துரைத்தார்.

அவரைத் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் மா. கார்த்திகேயன் அவர்கள் வரவேற்றார். உதவிப்பேராசிரியர் முனைவர் கா. பாலாஜி அவர்கள் நன்றி நவின்றார்.

## கவிச்சோலை

24.09.2013 அன்று நடந்த கவியரங்கத்தில் முதல்வரின் அன்புக் கட்டளையின்படி கவிச்சோலை யாக மலர்ந்தது. 08.10.2013 அன்று புதுச்சோலையாகத் தோன்றிய கவிச்சோலையில் கவிஞர்களாகத் தமிழ்த்துறைப் பேராசிரியர்களும் மாணாக்கர்களும் கலந்து கொண்டனர்.

இக்கவிச் சோலைக்குத் தமிழ்த் துறைத்தலைவர் முனைவர் மா. கார்த்திகேயன் அவர்கள் தலைமை தாங்கினார்.

பின் வரும் பேராசிரியர்கள் கீழ்க்கண்ட தலைப்புகளில் கவிதை வாசித்தனர்.

முனைவர் த. கண்ணன் - வண்ணங்கள்

முனைவர் க. பாலாஜி – கான்கிரீட் காடுகளும் இயந்திரப் பறவைகளும்

முனைவர் ந. சங்கீதா – அந்தி

திரு. ம. லோகேஸ்வரன் - கோலங்கள்.

பின் வரும் மாணவர்கள் கீழ்க்கண்ட தலைப்புகளில் கவிதை வாசித்தனர்.

பி. ஹேமலதா (II B.Sc.Maths-B) – அந்தி

ஆர். கீதா (I B.Sc.TFD-B) – அன்னை

டி. சுதா (I B.Sc.TFD-B) – அன்னை

*பி. கண்ணன் (II M.A. English) – கான்கிரீட் காடுகளும் இயந்திரப் பறவைகளும்*

*வி. யுகெந்திராம் பூபதி (II M.A. English) - கோலங்கள்*

*மேற்கண்ட தலைப்புகளில் கவிப்போர் போல கவிமழை பொழிந்தனர்.*

*கவிமழையைத் தொடர்ந்து வீசும் மலர் வாசனையாக ஹைக்கூ கவிதையில் குழந்தை, சின்னத்திரை, தென்றல், முத்தம் என்னும் தலைப்புகளில் மணம்பரப்பினர்.*

## AWARD

*We are happy to inform you that our Chairman Lion. Dr.K.S.Rangasamy. MJF has been honored by '·The Times Group of India" as ··**EDUPRENEURS'"** for the Fi nest Contribulion to the field of Higher Education in Tamil Nadu, on the eve of the celebration of Indomitable spirit of Edupreneurship in education.*

*The award was received by our Secretary & Managing Trustee Mr.R. Srinivasan from his Excel lency Honorable Dr. K. Rosaiah, Governor of Tamil Nadu on Sep. 28, 2013 at Taj Coromandel, Chennai.*

## ஓடம்

*"அருவியில் நீர் கொட்ட*
*அதில் பூக்கள் வீடு கட்ட*
*தேனீக்கள் வந்து நின்று*
*தேனின் இனிமையைப் பாராட்ட*
*கிளிகள் பறந்து வந்து*
*பழங்களை உண்டு மகிழ*
*மான்கள் துள்ளி விளையாட*
*குயில்கள் கூவி மகிழ்ந்து*
*இன்னிசை கவிபாட*
*மயில்கள் நடனமாடும்*
*முயல்கள் தாளமிடும்*
*இந்த இயற்கைக் காட்டில்*
*ஓடும் ஓடம் நம்மை*
*ஏற்றிச்செல்ல ஏங்கும்.*
*மனிதா!*
*நீ இயற்கையை நேசி"*

**சி. பிரசாந்த்**
*இளங்கலை வணிகவியல் கணினி பயன்பாடு மூன்றாமாண்டு 'அ' பிரிவு*

## அருள்

*"இறைவா!*
*உனை எண்ணி எண்ணி*
*உருகினேன் மெழுகாக.*
*வெளிச்சம் கிடைத்தது*
*என் வீட்டுக்கு."*

**மூ. விவேக்குமார்**
*இளங்கலை வணிகவியல் கணினி பயன்பாடு மூன்றாமாண்டு 'ஆ' பிரிவு*

◎